புலமைவளரி

இலக்கை நோக்கி


5

நேரம்:- 1.00மணி வளரி – 026 புள்ளி:-


பெயர்:- ..... வினாத்தாள் - I ஆசிரியர்:-ஐ.சிவசங்கரலிங்கம்.

❖ 01ஆம் 02ஆம் வினாக்களில் சொற்களுடன் தொடர்புடைய உருவைத் தெரிவு செய்க.

(01) சுத்தம், ஒற்றுமை, காலத்தை உணர்த்துதல்.



1.



2.




3.

(02) மழை, நிழல், தளபாடம்



1.




2.



3.


❖ 03ஆம் 04ஆம் வினாக்களில் உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

(03)






1.





2.



3.

(04)





1.



2.



3.

(05) உடைந்த பெயர்ப்பலகை ஒன்றின் பகுதிகள் தரப்பட்டுள்ளன. அதனை சரிப்படுத்த பொருத்தப்பட வேண்டிய விதத்தைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.



1. 2, 1, 3
2. 2, 3, 1
3. 3, 2, 1

(06) "அகங்காரம்" என்னும் சொல்லில் உள்ள எழுத்துக்கள் மூலம் ஆக்கக் கூடிய சொல் அல்லாதது.

1. அங்கம்
2. கங்கா
3. அக்கா

(07) பாம்புக்கு – தவளை எனின் தவளைக்கு .....

1. பாம்பு
2. வெட்டுக்கிளி
3. பேத்தை

(08) சிங்கம் - மாமிசம் எனின் முயல் .....

1. கரட்
2. கோழி
3. தாவரம்


(09) வினாக்குறி இடப்பட்டுள்ள இடத்தில் வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.





1. 2. 3.

(10) வினாக்குறி இடப்பட்டுள்ள இடத்தில் வரவேண்டிய இலக்கத்தைத் தெரிவு செய்க.



1. 12
2. 27
3. 10


(11) வீதி ஒன்றில் இரண்டு கம்பங்களுக்கிடையே மூன்று மின் விளக்குகள் வீதம் பத்து கம்பங்களுக்கிடையில் மின் விளக்குகள் அலங்கரிக்கப்பட்டு ஒளிரவிட்ட போது நான்கு மின் விளக்குகள் ஒளிரவில்லை. எனின் அங்கே ஒளிர்ந்த மின் விளக்குகள் எத்தனை?

1. 27
2. 24
3. 23

(12) ஒரு மரக்குற்றியை இரு துண்டாக்குவதற்கு 5 நிமிடங்கள் எடுத்தது. எனின் நான்கு துண்டாக்குவதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு?


1. 20 நிமிடங்கள்
2. 15 நிமிடங்கள்
3. 10 நிமிடங்கள்

(13) இதில் உருவாக்கக்கூடிய சதுரங்களின் எண்ணிக்கை எத்தனை?



1. 38
2. 40
3. 42

(14) ஓர் ஆடியில் விம்பமாகக்காட்சி தருகையில் அதே மாதிரித் தெரியும் இரு உருக்களும் எவை?

1. 
2. 
3. 

(15) P=5, B=2, T=9, V=3, K=6 எனின்

B x K = ...

1. P+T
2. VxB
3. T+V

(16) எனது மனைவியின் சகோதரனின் தந்தைக்கும் எனது மகனுக்கும் இடையே உள்ள உறவு முறை யாது?

1. மாமாவும் மருமகனும்
2. பாட்டனும் பேரனும்
3. பெரியதந்தையும் மகனும்

(17) சித்திரைப் புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது வழுக்கும் மரம் ஏறும் நிகழ்ச்சியில் ஒருவர் 40 அடி உயரமான கம்பத்தில் 6 அடி ஏறும் போது 4 அடி சறுக்குவார். எனின் கம்பத்தின் உச்சியை எத்தனை தடவையில் பிடித்திருப்பார்?

1. 17
2. 10
3. 18


(18) நேரம் 6.00 மணியைக் காட்டும் சுவர் கடிகாரம் ஒன்றின் மணி முள்ளுக்கும் நிமிட முள்ளுக்கும் இடையான கோணம்

1. செங்கோணத்திலும் குறைந்தது
2. செங்கோணம்
3. இரண்டு செங்கோணங்களுக்கு சமன்

(19) பீர்பாலின் வயது 8 ஆக இருக்கும் போது தென்னாலியின் வயது 12 ஆண்டுகளாகும். தென்னாலியின் வயது பீர்பாலின் வயதின் இருமடங்காக இருந்த போது தென்னாலியின் வயது எத்தனை?

1. 4 வயது 2. 6 வயது 3. 8 வயது



❖ **20 ஆம் 21 ஆம் வினாக்களுக்கு பின்வரும் அடைப்பில் தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி விடையைத் தெரிவு செய்க.**



(20) A, B ஆகிய இடத்திற்கு வரவேண்டிய பெறுமதிகள் முறையே

1. 11, 10 2. 10, 11 3. 21, 11

(21) 21 என்ற கூட்டுத்தொகையை தரக்கூடிய முறை

1. 
2. 
3. 

(22) ஓர் வகுப்பிலுள்ள ஆண் மாணவர்களின் எண்ணிக்கை அங்குள்ள பெண் மாணவிகளின் எண்ணிக்கையில் மூன்று மடங்காகும். நேற்று 4 ஆண்கள் வருகை தராத போது ஆண்கள், பெண்களின் எண்ணிக்கை சமனாகக் காணப்பட்டது. எனின் நேற்று வகுப்பிலுள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாது?

1. 6 2. 4 3. 10

(23) நாட்காட்டி ஒன்றில் அதிகம் காணப்படுவது


1. விடுமுறை தினம் 2. மாதம் 3. ஞாயிற்றுக்கிழமை

(24) "ஒரு நாள் நான் சைக்கிள் ஒன்றை மிதிக்காமலேயே எங்கள் வீடு வரை ஓட்டிச் சென்றேன்" என்று எனது நண்பன் கூறினான். இக்கூற்று

1. எப்போதும் உண்மை
2. எப்போதும் பொய்
3. சில வேளைகளில் உண்மை


❖ இடைவெளிக்கு வரவேண்டிய விடையைத் தெரிக.

(25)



1. 55 2. 37 3. 12

(26)



1. 50 2. 70 3. 19

(27) ஒரு பழக்கடையில் அன்னாசிப்பழங்களின் இருமடங்கு மாம்பழங்களும் தோடம்பழங்களும் அப்பிள் பழங்களின் இருமடங்கு அன்னாசிப்பழங்களும் இருந்தன. அங்கிருந்த அப்பிள் பழங்கள் தோடம்பழங்களிலும் 15 குறைவாகும். கடையிலுள்ள அன்னாசிப்பழங்கள் 80 எனின் அங்குள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கை யாது?

1. 95 2. 305 3. 245

(28) காசிமிலும் நதீஸ் ரூபாய் 150.00 கூடுதலாக பெற்றுக்கொள்ளும் விதமாக ரூபாய் 600.00 ஐ இருவரும் பகிர்ந்து கொண்டனர். எனின் நதீஸ் பெறும் தொகை யாது?

1. ரூபாய் 300.00 2. ரூபாய் 225.00 3. ரூபாய் 375.00

(29) அடைப்பிலுள்ள மிகச்சிறிய சதுர எண்ணை மிகப்பெரிய இரட்டை எண்ணால் பெருக்கும் போது கிடைக்கும் விடை யாது?

1. 60 2. 120 3. 180

6	5	4	23	15
7	19	33	8	3
10	2	30	17	29

❖ **30ஆம் 31ஆம் வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள கூற்றைப் பற்றிய சரியான முடிவைத் தெரிவு செய்க.**

(30) மின்னல் தாக்கத்தினால் கண்டியில் ஒரு பெண் உயிரிழந்து விட்டதாக பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

1. எப்போதும் மின்னல் தாக்கத்தினால் பெண்கள் இறந்து விடுகின்றனர்.
2. பெரும்பாலும் மின்னல் தாக்கத்தினால் ஆண்கள் இருப்பதில்லை.
3. சில வேளைகளில் மின்னல் தாக்கத்தினால் உயிராபத்துக்களும் ஏற்படுகின்றன.

(31) "நீரில் முதலை ஒன்று இட்ட முட்டையை மீன்கள் உடைத்து விளையாடின" என்ற கூற்றை எம்மால் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. அதற்கான காரணம்?

1. முதலைகள் நீரில் முட்டை இடுவதில்லை
2. முதலைகள் ஒருபோதும் முட்டை இடுவதில்லை
3. மீன்கள் முதலைகளின் முட்டைகளை உடைப்பதில்லை


(32) சிவாவின் ஒரே பிள்ளையாகிய கண்ணன் பிரத்தியேக வகுப்பிற்குத் தாமதமாக வந்து அண்ணாவுடன் சைக்கிளில் வருகை தந்ததால் தாமதமாக வருகை தந்ததாக ஆசிரியரிடம் கூறினான். இக்கூற்று உண்மையாக இருப்பதற்கு காரணமாக அமையக்கூடியது

1. கண்ணன் விளையாட்டுத் தனம் மிக்கவன்
2. சிவாவின் தம்பின் மகன் அவன் வீட்டில் வசிக்கின்றான்
3. கண்ணன் பொய் கூறும் நல்ல பிள்ளையாவான்

(33) மு.ப 8.00 மணிக்கு புறப்பட்ட பேருந்து ஒன்று பி.ப 4.00 மணிக்கு 10 நிமிடம் காணப்படும் போது தனது பயணத் தூரத்தைச் சென்றடைந்தது. எனினும் அப் பேருந்து 35 நிமிடங்கள் தாமதமாகவே பயணத் தூரத்தைச் சென்றடைந்தது. எனின் குறிப்பிட்ட தூரத்தை அடைய வேண்டிய உண்மையான தூரம் யாது?

1. பி.ப 3.50 2. பி.ப 4.35 3. பி.ப 3.15

❖ **பின்வரும் தொடர்புகளின் அடிப்படையில் 34ஆம் 35ஆம் வினாக்களுக்கு விடை தருக.**



(34) B யின் வெற்றிடத்துக்கான கூட்டுத்தொகைப் பெறுமதி யாது?

1. 30 2. 70 3. 90

(35) பெறுமதி கூடிய, குறைந்த கூட்டுத்தொகை காணப்படக் கூடிய இடங்கள் முறையே

1. D, C 2. D, A 3. A, D

❖ **36ஆம் 37ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள இரு வாக்கியங்களினதும் கருத்திற்கேற்ப சரியான கூற்றைத் தெரிவு செய்க.**

(36) சாந்தியின் வலது பக்கத்தில் கீதா இருக்கின்றாள். கீதா குமாரிக்கு இடது பக்கத்தில் இருக்கின்றாள். ஆகவே

1. குமாரி சாந்திக்கு இடது பக்கத்தில் இருக்கின்றாள்.
2. கீதா இருவருக்கும் இடையில் இருக்கின்றாள்.
3. சாந்தி குமாரிக்கு வலது பக்கத்தில் இருக்கின்றாள்.

(37) இரண்டு மின்கலங்களுடன் ஒரு மின்குமிழை இணைத்த போது மின்குமிழ் பிரகாசமாக ஒளிர்ந்தது. மேலும் ஒரு மின்கலத்தை இணைத்தால் மின்குமிழின் பிரகாசம் அதிகரிக்கும். ஆனால் மேலதிக மின்கலத்தை இணைக்கவில்லை எனின் சிறிது நேரத்தில்

1. மின்குமிழ் பழுதடையும்
2. மின்குமிழின் பிரகாசம் மாறாதிருக்கும்
3. மின்கலத்தின் மின்சக்தி குறைவடையும்

❖ **ஒரு நிரையில் ரோகித் தொடக்கத்திலிருந்து 15 ஆவதாக நிற்கின்றான். அவன் கடைசியிலிருந்து 8 ஆவதாக நிற்கின்றான். இதற்கேற்ப**

(38) நிரையில் எத்தனை நபர்கள் நிற்கின்றனர்?

1. 23 2. 22 3. 21

(39) அந்நிரையில் மோகன் தொடக்கத்திலிருந்து 6 ஆவதாக நிற்கின்றான். அவனுக்குப் பின்னால் எத்தனை நபர்கள் நிற்கின்றனர்?

1. 15 2. 16 3. 17

(40) 2016 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி வெள்ளிக்கிழமையாகும். அதே வருடத்தின் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி என்ன கிழமையாகும்?

1. வெள்ளிக்கிழமை 2. சனிக்கிழமை 3. வியாழக்கிழமை

புலமைவளரி 5

இலக்கை நோக்கி

நேரம்:- 1.15மணி வளரி – 026 புள்ளி:-

பெயர்:- ..... வினாத்தாள் - II ஆசிரியர்:-ஐ.சிவசங்கரலிங்கம்.

01) பின்வரும் வினாக்களுக்கான விடைகளை பந்தியில் இருந்து தெரிவு செய்து எழுதுக.

உலகில் தேநீர் பலரால் விரும்பி அருந்தப்படும் ஒரு பானம். உற்சாகம் பெறுவதற்காகவும் விருந்தினரை உபசரிப்பதற்கும் தேநீர் பயன்படுகின்றது. தேயிலையை ஆயிரத்து எண்ணூற்று அறுபத்தேழாம் ஆண்டு ஆங்கிலேயரால் நமது நாட்டுக்கு அறிமுகம் செய்யப்பட்டது. கண்டிக்கு அண்மையிலுள்ள "லூல்கந்தூர" என்னுமிடத்திலேயே முதன் முதலாக தேயிலைத் தோட்டம் உருவாக்கப்பட்டது.

1. தேயிலையை அறிமுகம் செய்தவர்கள் யார்? .....
2. தேயிலை எத்தனையாம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது? .....
3. நிகழ்கால ஒருமை அறிணை வினைச்சொல் ஒன்றைப் பந்தியில் இருந்து தெரிந்தெடுத்து எழுதுக. .....
4. இரட்டைக் கொம்பு, விசிறியும் சுழியும் கொண்ட ஒரு சொல்லைப் பந்தியிலிருந்து கண்டுபிடித்து எழுதுக.....
5. தேநீர் என்பதைப் பிரித்து எழுதுக. .....
6. சோம்பல் என்பதன் எதிர்ச் சொல் ஒன்றை கண்டுபிடித்து எழுதுக. .....

(1x6=6புள்ளிகள்)

02) தரப்பட்ட வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. பூனையைக் கண்ட எலி துள்ளி ..... (ஓடியது /தாவியது)
2. நானும் அம்மாவும் சந்தைக்குச் ..... (போனோம் /சென்றோம்)

(1x2=2புள்ளிகள்)

03) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான வினைச்சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. மழை பெய்ததால் குளம் ..... (நிரம்பியது / நிரம்பும்)
2. நாய் பூனைகளை துரத்திச் ..... (சென்றன / சென்றது)

(1x2=2புள்ளிகள்)

04) கீழேயுள்ள வாக்கியத்தின் வெற்றிடத்திற்கான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. உழவன் நெல் விதைத்தான். இதில் நெல் என்பது ..... (செயற்படு பொருள் / எழுவாய்)

2. "தம்பி அப்பாவின் மனதைப் புண்படுத்தினான்" என்பதில் புண்படுத்தல் என்ற மரபுத்தொடரின் கருத்து ..... (காயப்படுத்துதல் / மனம் நோகப் பேசுதல்)

(1x2=2புள்ளிகள்)

05) பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.

1. உலகில் தேநீர் பலரால் விரும்பி அருந்தப்படும் ஒரு பானம்
2. ஒருவரிடம் உள்ள கல்வி வெள்ளத்தினால் அழியாது நெருப்பினால் வேகாது கள்வர்களால் கொள்ளையிடவும் முடியாது

(1x2=2புள்ளிகள்)

06) பொருத்தமான சொற்களை வைத்து வெற்றிடங்களை நிரப்புக.

வழி , வலி , வளி , அலை , அளை , அழை

1. நாம் சுவாசிக்க ..... உதவுகிறது.
2. பரிசளிப்பு விழாவிற்று பாடசாலை அதிபரை .....த்தார்கள்.
3. சிங்கம் பசியினால் எங்கும் .....ந்து திரிந்தது.

(1x3=3புள்ளிகள்)

07) பழமொழியில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.

1. எலி வளையானாலும் ..... வேண்டும்.
2. குப்பையில் கிடந்தாலும் ..... மங்காது.

(1x2=2புள்ளிகள்)

08) சரியான சொல்லின் கீழ்க் கோடிடுக.

1. இராட்சியம் , இராச்சீயம் , இராச்சியம் , இறாச்சியம்
2. செய்நன்றி , செய்ந்நன்றி , செய்ந்நன்ரி , செய்ந்நண்றி

(1x2=2புள்ளிகள்)


09) தரப்பட்டுள்ள குறுக்கெழுத்து கட்டங்களை பூரணப்படுத்துக.

இடமிருந்து வலம்

1. அரசி போல பூ பூக்கும் அம்மாடி என்று காய் காய்க்கும்.
2. நீரில் செல்லும் போக்குவரத்து சாதனம்.

மேலிருந்து கீழ்

1. சமையலுக்கு உதவும் வாசனைப் பொருள்.



(1x3=3புள்ளிகள்)

10) **பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

1. Tell your parents .....
2. Please wipe your feet .....

(1x2=2புள்ளிகள்)

11) **வினாக்களில் தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. My ..... is Amale (home / name)
2. I want to drink a ..... of tea (bottle / cup)

(1x2=2புள்ளிகள்)

12) **பின்வரும் வாக்கியத்தின் கருத்தினை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

1. நான் பூக்கள் கொண்டு வருவேன். .....

(1x2=2புள்ளிகள்)

13) **பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

1. உங்கள் பாடசாலையின் பெயர் என்ன .....

(1x2=2புள்ளிகள்)

14) **பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.**

1. கரவில வல .....

(1x2=2புள்ளிகள்)

❖ **பின்வரும் வினாக்களுக்கான விடைகளை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

15) இலக்கத்தில் தரப்பட்டுள்ள எண்ணை சொற்களில் எழுதுக.


2367 - .....

16) 1. வட்டத்தினுள் உள்ள எண்களைப் பயன்படுத்தி ஆக்கக்கூடிய மிகப் பெரிய எண்

.....

2. ஆக்கக்கூடிய மிகச்சிறிய எண் யாது?


.....



17) பூச்செண்டிலுள்ள மொட்டுக்களின் எண்ணிக்கையின் மூன்று மடங்கை உரோம எண்களில் தருக.

.....



18) 

இவ்வுருவினுள்ளே எத்தனை செங்கோணங்கள் உள்ளன?

.....

19) ஒரு குவியலில் 1236 மாங்காய்கள் உண்டு. இன்னொரு குவியலில் 2460 மாங்காய்கள் உண்டு. இரு குவியலிலுமுள்ள மாங்காய்கள் எத்தனை? .....

20) 4750ml நீர் கொள்ளும் தாங்கியில் 2450ml நீர் மட்டும் உள்ளது. இன்னும் எத்தனை l நீர் ஊற்றினால் அத்தாங்கி நிரம்பும்? .....

21) மூன்றுகம்பங்களுக்கிடையான தூரம் 24m எனின் 11 கம்பங்களுக்கு இடையான தூரம் எவ்வளவு? .....

22) 1. 5வது சதுர எண் எது? .....

2. $\frac{2}{4}$ இற்கு சமவலுப் பின்னங்கள் இரண்டு எழுதுக.....

23) பி.ப 1.30 மணிக்கு செல்லவிருந்த புகையிரதம் 45 நிமிடங்கள் தாமதமாக புறப்பட்டது. எனின் புகையிரதம் புறப்பட்ட நேரத்தை நியம நேரத்தில் தருக.....

24)

492	368	236	161

1. 604 ஐ கூட்டுத் தொகையாகப் பெற எவ்விரு எண்களைக் கூட்டவேண்டும்?

.....

2. தரப்பட்ட எண்ணொன்றிலிருந்து இன்னோர் எண்ணைக் கழிக்கும் போது விடையாக 124 கிடைத்தது எனின் அவ்விரு எண்களும் எவை? .....

25) ரதியின் வயது 35 வருடங்கள் 4 மாதங்கள் ஆகும். அவளது தம்பியின் வயது 22 வருடங்கள் 6 மாதங்கள் ஆகும். இருவருக்குமிடையான வயது வித்தியாசம் எவ்வளவு?

.....

26) ஒரு பெட்டியில் 8 பந்துகள் இடமுடியும். 129 பந்துகள் இடுவதற்கு எத்தனை பெட்டிகள் தேவை? .....


27) 15m நீளமான கம்பித் துண்டிலிருந்து 4m 20cm நீளமுள்ள இரு துண்டுகள் வெட்டி எடுக்கப்பட்டது. மீதித் துண்டின் நீளம் யாது? .....

28) ரகுவின் நிறை 27மப 250ப ஆகும். ரவியின் நிறை ரகுவின் நிறையை விட 1மப 650ப கூட ஆகும்.

1. ரவியின் நிறை யாது? .....

2. இருவரினதும் மொத்த நிறை யாது? .....

29) தரப்பட்ட தகவலைக் கொண்டு விடை தருக.



கிளிநொஞ்சியில் இருந்து திருகோணமலை வரையான தூரம் எவ்வளவு?

.....

(2x15=30புள்ளிகள்)

➢ **30 தொடக்கம் 59 வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிக.**

30) மாற்று முறைப் பயிர்ச் செய்கைக்கு பயன்படும் பொருளாக அமையாதது.

1. டயர் 2. மூங்கில் 3. மீன்தொட்டி

31) வெட்டுக்கிளியை உணவாக உட்கொள்ளும் பிராணி.


1. தவளை 2. நாய் 3. செண்பகம்

32) ஊறுகாயைப் பத்திரப்படுத்த பொருத்தமான பாத்திரமல்லாதது.

1. மட்பாத்திரம்
2. அலுமினியப் பாத்திரம்
3. கண்ணாடிப் பாத்திரம்

33) ஒலிம்பிக் கொடியில் ஆசியாக் கண்டத்தைக் குறிக்கும் வளையத்தின் நிறம்.

1. சிவப்பு 2. மஞ்சள் 3. பச்சை

34)  இவ்வீதிக் குறியீட்டை அவதானிக்கக் கூடிய இடம்.

1. பாதை ஆரம்பிக்கும் இடம்
2. பாதையின் வளைவுகளில்
3. பாலங்களின் நடுவில்

35) தொலைபேசியைக் கண்டுபிடித்த பெருமைக்குரியவர்.

1. தோமஸ் அல்வா எடிசன் 2. சார்ள்ஸ் பபீச் 3. அலெக்சாண்டர் கிரகம்பெல்

36) தேசப்படத்தில் பாலம் ஒன்றினை குறித்துக் காட்ட பயன்படும் நிறம்

1. கறுப்பு 2. நீலம் 3. கபிலம்

37) பூவின் பெண்பாக உறுப்பாக அமையும் பகுதி

1. மகரந்தம் 2. அல்லி 3. சூலகம்

38) பாதுகாப்புக் கண்ணாடி அணிந்து வேலை செய்பவர்?

1. மேசன் 2. மீனவர் 3. உருக்கி ஒட்டுபவர்

39) "மாடு ரெண்டும் மாவெள்ளஅமணிக ரெண்டும் தஞ்சாவூரு" இப்பாடல் எச்சந்தர்ப்பத்தில் பாடப்படும்

1. மீன் பிடிக்கும் போது 2. அரிவு வெட்டும் போது 3. வண்டி ஓட்டும் போது

40) மின்சக்தியை வெப்ப சக்தியாக மாற்றும் உபகரணம்

1. தொலைக்காட்சி 2. மின்னழுத்தி 3. கணினி

41) மின்குமிழின் இழை தயாரிக்கப் பயன்படும் உலோகம்

1. அலுமினியம் 2. உருக்கு 3. தங்குதன்

42) தொடர்பாடலுக்குப் பயன்படுத்தப்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்

1. தொலைபேசி 2. பத்திரிகை 3.கணினி

43) மாம்பழம், வேங்கை, தேங்காய் எனும் வித்துவகைகள் பரம்பலடைவது முறையே

1. விலங்குகளின் மூலம், காற்றின் மூலம், நீரின் மூலம்
2. காற்றின் மூலம், நீரின் மூலம், விலங்ககளின் மூலம்
3. விலங்குகளின் மூலம், நீரின் மூலம், காற்றின் மூலம்

45) தாய்ப்பூனை குட்டியை வாயால் தூக்கிச் செல்ல வாயினால் பற்றுவது குட்டியின்

1. தலைப்பகுதியை 2. கழுத்துப்பகுதியை 3. வயிற்றுப்பகுதியை

46) கீழேதரப்பட்ட நோய்களில் ஒரு நோய் மற்றைய நோய்களிலிருந்தும் வேறுபடுகின்றது அது எது?

1. மலேரியா 2. கொலரா 3. யானைக்கால்

47) குழுவாக வேலை செய்வதால் கிடைக்கும் அனுகூலமல்லாதது

1. சலிப்பு இருக்காது
2. முரண்பாடுகள் தோன்றும்
3. வேலை விரைவாக முடியும்

48) பின்வருவனவற்றில் நாருருத்தாவரம் அல்லாதது.

1. பனை 2. பலா 3. தென்னை

49) விரலிடை மென்சவ்வை கொண்டிருக்கும் பிராணி

1. நீர்க்காகம் 2. காகம் 3. கொக்கு

50) வளியடக்கம் கூடிய மண்

1. தோட்டமண் 2. மணல்மண் 3. களிமண்

51) இரவு நேரத்தில் இலைகளை சுருக்கிக் கொள்ளும் தாவரம்

1. நாவல் 2. அகத்தி 3. விளாத்தி

52) மனநல வைத்தியசாலை அமைந்துள்ள இடம்

1. பெல்கொட 2. வெயாங்கொட 3. அங்கொட

53) கண்சிகிச்சைக்குரிய சிறப்புமிக்க வைத்தியசாலை அமைந்துள்ள இடம்

1. கொழும்பு 2. பொலநறுவை 3. கண்டி

54) வெப்பமானியில் பயன்யடுத்தப்படும் திரவ உலோகம்

1. வெள்ளி 2. இரசம் 3. நிறநீர்

55) செட்டை உருவாகி பறக்கும் பூச்சி அல்லாதது

1. கறையான் 2. நுளம்பு 3. மயிர்க்கொட்டி

56) புதிய நூறு ரூபாய் தாளில் கண்பார்வையறநோர் தொட்டுணர்வதற்காக காணப்படும் புள்ளிகளின் எண்ணிக்கை?

1. 2 2. 3 3. 5

57) இலங்கையில் மிக உயரமான மலை?

1. இமயமலை 2. பேதுருதாலகாலமலை 3 சிவனொளிபாதமலை

58) புகையிரதம் பறப்படுவதற்கு காட்டப்படும் கொடியின் நிறம்?

1. பச்சை 2. கறுப்பு 3. சிவப்பு

59) வேடர்களின் நடனம் ஒன்று?

1. காவடி 2. கும்மி 3. கிரிகொரங்க

(1x30=30புள்ளிகள்)

60) **நீர் வீட்டு முற்றத்தில் கதிரையில் அமர்ந்திருந்து சூழலில் உள்ள மரங்களை அவதானித்துக் கொண்டிருந்த போது மரப்பொந்து ஒன்றில் கிளிக்குஞ்சு ஒன்று பறக்க முடியாமல் கூட்டிற்கு வெளியே எட்டிப் எட்டிப் பார்த்த வண்ணம் கீச்கீச் என்று கத்திக் கொண்டிருந்தது**. இந்த வேளை உமது உள்ளத்தில் ஏற்படும் உணர்வுகளை வெளிக்காட்டும் வகையில் கருத்துள்ள மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஓவ்வொரு வாக்கியமும் ஆறு சொற்களுக்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

1.....
.....

2.....
.....

3.....
.....

(2x3=6புள்ளிகள்)